2023 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 139, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

139—

பேருந்து வசதி

***6923—திரு. மு.பெ. கிரி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, செங்கம் நகரில் இருந்து வேலூர்–போளூர் வழியாக திருப்பதிக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையான செங்கம் நகரிலிருந்து வேலூர்-போளூர் வழியாக திருப்பதிக்குச் செல்வதற்கு பேருந்து இயக்கும் திட்டம் அரசிடம் இல்லை. காரணம், 2 மாநிலங்களுக்கிடையே பேருந்து இயக்க வேண்டுமென்றால், இரண்டு மாநிலங்களுக்கிடையேயான புதிய வழித்தட ஒப்பந்தங்கள் ஏற்படுகின்றபோது, பேச்சுவார்த்தை நடத்தப்படுகின்றபோதுதான் அந்தப் பேருந்துப் பட்டியலில் இணைக்கப்பட வேண்டும். அப்படி பேச்சுவார்த்தை நடைபெறுகின்றபோது, இணைக்கப்பட்டு, புதிய வழித்தடம் பெறப்படும் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் தொகுதி, நீப்பதுரையில் அருள்மிகு பிரசன்ன வெங்கடேச பெருமாள் கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலிலிருந்து செங்கம், கலசப்பாக்கம் வழியாக, போளூர்–வேலூர் வழியாக அந்தப் பேருந்தை இயக்கும்பட்சத்தில் அரூர் தொகுதி, ஊத்தங்கரை தொகுதி, செங்கம் தொகுதி, கலசப்பாக்கம்*

தொகுதி, போளூர் தொகுதி மக்கள் அதன்மூலம் பயன்பெறுகின்ற வாய்ப்பு இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேச்சுவார்த்தை நடக்கின்றபோது அல்ல; முன்கூட்டியே இந்த 4 தொகுதி மக்களும், 3 மாவட்ட மக்களும் பயன்பெறுகின்ற வகையில், இங்குள்ள பிரசன்ன வெங்கடேச பெருமாள் கோயிலிலிருந்து வெங்கடேச பெருமாளைத் தரிசிப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன் தொகுதியில் செங்கத்தில் இருக்கின்ற பெருமாளை விட்டுவிட்டு, திருப்பதியிலே இருக்கின்ற பெருமாளைத் தரிசிக்க அவர் துடிக்கிறார். தெரிகிறது. இருந்தாலும் செங்கத்திலிருந்து திருவண்ணாமலைக்கு 35 கி.மீ. தூரம். ஏற்கெனவே 5 நிமிடத்திலிருந்து 10 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதம் செங்கத்திலிருந்து திருவண்ணாமலைக்கு இயக்கப்படுகிறது. திருவண்ணாமலையிலிருந்து திருப்பதிக்கு 30 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. 60 வழிநடைகள் இயக்கப்படுகின்றன. எனவே, அவர் 35 கி.மீ.தூரம் பயணம் செய்தால், திருவண்ணாமலையிலிருந்து செல்லுகின்ற பேருந்துகளில் 1 மணி நேரத்திற்கு 2–லிருந்து 3 பேருந்துகள் வரை செல்லும். அதிலே செல்வதற்கு எளிதாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த வழிமுறையைக் கடைப்பிடிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீப்பதுரைக்கும் செங்கத்திற்கும் இடையே 70 கி.மீ. தூரம் இருக்கிறது. 5 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வேலூர் வழியாக திருப்பதிக்குச் செல்கிறது. அதை எங்கள் பகுதிக்கு மாற்றம் செய்து, நீட்டிப்பு செய்து தர வேண்டும். அதற்கு எந்த மாநில ஒப்பந்தமும் தேவைப்படாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 11]

கடந்த 12 ஆண்டுக்காலமாக ஜவ்வாதுமலைப் பகுதிக்கு தலைவர் கலைஞரின் ஆட்சியிலே 30 கோடி ரூபாய் செலவிலே, இன்றைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரும் அன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களும் நிதியொதுக்கி, நடைபாதையாக இருந்ததை சாலையாக அமைத்தோம். சாலை அமைத்தும் இந்த 12 ஆண்டுக்காலமாக, எங்கள் தொகுதியிலுள்ள கலசப்பாக்கம் மற்றும் செங்கம் தொகுதிகளுக்குட்பட்டிருக்கின்ற மலைவாழ் மக்கள் இன்றளவும் பேருந்து வசதிக்காக செங்கம் தாலுகா அலுவலகத்திற்கு வருவதற்கும் அல்லது மாவட்டத் தலைநகரமாக இருக்கின்ற திருவண்ணாமலைக்கு வருவதற்கும் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்தவித காரணமும் சொல்லாமல், உடனடியாக எங்கள் மலைவாழ் மக்களுக்கு ஒரு பேருந்தை செங்கம்-பரமனந்தல்-மேல்பட்டு வழியாக இயக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வழித்தடம் இல்லாமல் பேருந்து வழித்தடத்தை நீட்டித்து திருப்பதிக்கு பேருந்தைக் கேட்டிருக்கின்றார். அருகாமையில் வருகின்ற பேருந்து, அது எந்தப் பேருந்து, எந்தப் பேருந்தின் வழித்தடத்தை நீட்டிக்க முடியும் என்பதைக் கணக்கில் எடுத்து, பேருந்தின் வழித்தடத்தை நீட்டிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

அதேபோன்று, மலை கிராமத்திற்கு பேருந்தைக் கேட்டிருக்கின்றார். ஏற்கெனவே, தருமபுரி மாவட்டத்தில் பேருந்தே பார்த்திராத வத்தல்மலைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகப் பயணம் செய்தபோது, மக்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, சுதந்திரம் அடைந்த 1947 ஆம் ஆண்டிலிருந்து இப்போது வரை பேருந்தைப் பார்க்காத கிராமத்திற்கு, புதிய பேருந்து வழித்தடத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்தார்கள். அதேபோல் மலை கிராமங்களுக்கு பேருந்து ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய சொந்த மாவட்டம் அரியலூர். அதனுடைய தலைநகரம் அரியலூர். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய இல்லத்தரசியினுடைய சொந்த ஊர் பாபநாசம்.*

பாபநாசம் மக்கள் நீண்ட நாட்களாக, பாபநாசத்திற்கும் அரியலூருக்குமிடையே நேரடிப் பேருந்து வசதி வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். தற்போது மூன்று பேருந்துகள் மாறிதான் அரியலூருக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அரியலூரில் இருக்கக்கூடிய சிமெண்ட் தொழிற்சாலைக்கு ஏராளமான தொழிலாளர்கள் பாபநாசம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளிலிருந்து செல்கிறார்கள். மாணவர்களும் செல்கிறார்கள். அங்கு இருக்கக்கூடிய புனித காளிகாம்பாள் கோயிலுக்கும் ஏராளமான பக்தர்கள் செல்கிறார்கள். மேலும், அரியலூரில் பல்லவன் விரைவு வண்டி, வைகை தொடர் வண்டி ஆகியவற்றில் பயணிப்பதற்கு ஏதுவாக நேரடியாக பாபநாசத்திலிருந்து அரியலூருக்கு பேருந்து வசதிகளை ஏற்பாடு செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக வினவ விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேராசிரியர். கேள்வியை எப்படி கேட்டால், பதிலை எப்படி பெறலாம் என்று, எனது இல்லத்தரசியைக் கோர்த்துவிட்டு என்னிடமிருந்து பதிலைப் பெறலாம் என நினைக்கின்றார். பேராசிரியர் அவர்கள் ஏற்கெனவே தொடர்ந்து இந்தக் கோரிக்கையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.*

இந்த வழித்தடத்தில் அரியலூரிலிருந்து திருவையாறு வழியாக தஞ்சாவூர் சென்றுதான் அவர்கள் பாபநாசம் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. நேரடியாக திருவையாறு வழியாக, கபிஸ்தலம் வழியாகச் செல்ல வேண்டுமென்பது பேராசிரியருடைய கோரிக்கை. ஏற்கெனவே நானும், பேராசிரியரும் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களிடம் ஒரு கோரிக்கை

2023 ஏப்ரல் 11]

வைத்திருக்கின்றோம். அரியலூர் மாவட்டத்தையும் பாபநாசம் தொகுதியையும் இணைப்பதற்கு ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று, அதை கதவணைத் திட்டமாக, பாலமாகக் கட்ட வேண்டுமென்று; பாலமாக அமைத்துத் தந்தால், அரியலூரிலிருந்து பாபநாசத்திற்குப் பேருந்துகளை நேரடியாக இயக்குவதற்கு இன்னும் வசதியாக இருக்கும் என்பது பேராசிரியருடைய எண்ணம். இருப்பினும் அதையும் கருத்தில்கொண்டு, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களிடம் எங்கள் கோரிக்கையை கருணையோடு பரிசீலிக்க வேண்டுமெனக் கேட்டு, இந்தப் பேருந்து வழித்தடத்தை நீட்டிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜூனன் அவர்கள்.*

திரு. பொ. அர்ஜூனன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதி, திண்டிவனம் நகரத்திலிருந்து ஓங்கூர், காட்டுபூஞ்சை, ஆவணிப்பூர் வழியாக மரக்காணம் வரை பேருந்து இயக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர்ஜூனன் அவர்கள் அந்தக் கோரிக்கையை எழுத்து வடிவத்தில் தந்தால், அதிகாரிகளோடு தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 140, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

140—

குடமுழுக்கு

***54745—திருமதி எஸ். தேன்மொழி:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—